செ.வெ.எண்.28 நாள். 10.04.2017

# தமிழ்நாடு அரசு
## வட்டாட்சியர் அலுவலகம், நான்குனேரி
## வேலைவாய்ப்பு அறிவிக்கை

ந.க.எண் அ6/5305/2016 நாள் .03.2017

நான்குநேரி வட்டத்திற்குட்பட்ட கீழ்க்கண்ட கிராமத்தில் காலியாக உள்ள கிராம உதவியாளர்கள் காலி பணியிடத்திற்கு கீழே குறிப்பிட்ட இன சுழற்சி முறையைப் பின்பற்றி பணிநியமனம் செய்ய அறிவிக்கை செய்யப்படுகிறது.

| பதவி | எண்ணிக்கை | காலியாகவுள்ள கிராம உதவியாளர் பணியிடம் | கல்வி தகுதி | வயது | ஊதிய விகிதம் | இனசுழற்சிமுறை |
|---|---|---|---|---|---|---|
| கிராம உதவியாளர் | 1 | தெற்கு நான்குனேரி | 5ஆம் வகுப்பு தேர்ச்சி | 21 முதல் 35 | 3500-6000+800GP | பட்டியல் இனத்தவர் (SC) அருந்ததியருக்கு முன்னுரிமை (முன்னுரிமை அற்றவர்) |
| கிராம உதவியாளர் | 1 | அ.சாத்தான்குளம் | 5ஆம் வகுப்பு தேர்ச்சி | 21 முதல் 35 | 3500-6000+800GP | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் (முன்னுரிமை அற்றவர்) |

1.விண்ணப்பதாரர்கள் எழுத, படிக்க தெரிந்திருத்தல் அவசியம்.

2.தெற்குநான்குனேரி கிராம உதவியாளர் பணியிடத்திற்கு விண்ணப்பிப்பவர்கள் தெற்குநான்குனேரி, இராஜாக்கள்மங்கலம் -1, இராஜாக்கள்மங்கலம் -2, நான்குனேரி, மறுகால்குறிச்சி, சூரன்குடி ஆகிய கிராமத்தைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும்.

3.அ.சாத்தான்குளம் கிராம உதவியாளர் பணியிடத்திற்கு விண்ணப்பிப்பவர்கள் பூலம், கர்ந்தானேரி, தோட்டாக்குடி, ஆழ்வானேரி, பருத்திப்பாடு ஆகிய கிராமத்தைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும்.

4.விண்ணப்பிக்க விரும்பும் நபர்கள் தனித்தாளில் பெயர், பிறந்த தேதி, வயது, கல்வி தகுதி, ஜாதி, இருப்பிட முகவரி, பணிஅனுபவம் போன்றவற்றை குறிப்பிட்டும், இருப்பிட சான்று மற்றும் அரசிதழ் பதிவுபெற்ற அலுவலரிடமிருந்து பெற்ற நன்னடத்தைச் சான்றுடன் நாளது வரையிலான மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் முன்னுரிமை மற்றும் இனசுழற்சி அடிப்படையில் தகுதியானவர்கள் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பங்கள் வருவாய் வட்டாட்சியர் நான்குனேரி என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ வருகின்ற 27.04.2017 பிற்பகல் 5.45மணிக்குள் கிடைக்குமாறு அனுப்ப வேண்டும்.

5. விண்ணப்பதாரர்களுக்கு சான்றிதழ் சரிபார்ப்பு, நேர்முகத்தேர்வு நடைபெறும் நாள், இடம் ஆகியவை குறித்து தனியாக கடிதம் மூலம் தகவல் அனுப்பப்படும். பணியிடங்களுக்கு தகுதியான நபர்கள் இனசுழற்சி மற்றும் நேர்முகத்தேர்வு மதிப்பெண்கள் அடிப்படையில் நியமனக்குழு உறுப்பினர்களால் தேர்வு செய்யப்பட்டு அசல் சான்றிதழ்கள் சரிபார்க்கப்பட்டு தற்காலிக பணிநியமனம் வழங்கப்படும்

6.நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ளும் நபர்களுக்கு பயணப்படிகள் எதுவும் வழங்கப்படமாட்டாது.

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:

வருவாய் வட்டாட்சியர்
நான்குனேரி
திருநெல்வேலி மாவட்டம்

மாவட்ட ஆட்சித்தலைவர்,
திருநெல்வேலி.

வெளியீடு
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
திருநெல்வேலி